# PEOPLE'S LIBERATION ORGANIZATION OF THAMILEELAM

www.tamilarangam.net

## தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாகக் கூறிக் கொண்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் (TULF ) போலி உருவை ஈழம்வாழ் தமிழ் மக்கள் மத்தியிலும், உலக நாடுகளிலும் வெளிப்படுத்தவேண்டிய தேவை இன்று எமக்கு ஏற்பட்டுள்ளது.

எந்தவிதமான விடுதலைக்கான அமைப்புகளையோ, போராட்டத் திட்டங்களையோ, இன்றேல் போராட்டங்களையோ செயற்படுத்தாத நிலையிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் (TULF ), தாம்தான் தமிழீழத்தின் விடுதலைக்காகப் போராடும் ஒரே இயக்கம் எனவும், தம் கட்டுப்பாட்டின் கீழ்த்தான் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் கழகங்களும், இளைஞர் இயக்கங்களும் செயற்பட்டுவருகின்றன என்ற தவறான கருத்தினை மறைமுகமாகவும், தேவைக்கேற்ப வெளிப்படையாகவும், தமிழீழ மக்கள் மத்தியிலும், உலக நாடுகளிலும் செய்திகளைப்போலித்தனமாகப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். இதன் மூலம் தமிழீழத்தில் தேர்தல் காலங்களில் வாக்குகளைப் பெற்று லாபம் பெறவும், வெளிநாடுகளில் விடுதலைக்குக் கிடைக்கக்கூடிய ஒரு சில உதவிகளையும் தாங்கள் அபகரித்துக்கொண்டு தங்கள் தனிவாழ்வினை வளம்படுத்திக் கொள்கின்றனர். இதுமட்டுமன்றி, ஐக்கிய தேசிய கட்சியுடன் (UNP ), மறைமுகக் கூட்டு வைத்து ஏகாதிபத்திய அமெரிக்க அரசுக்கு ஆதரவாகவும் செயற்பட்டு வருகின்றனர்.

இதன்மூலம் விடுதலைக்குப் போராடும் கழகங்களுக்கும், போராளிகளுக்கும் பேராபத்து ஏற்படுத்தியுள்ளனர். இவ்வாறான சூழ்நிலையிலேயே முறைமுக இயக்கங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின (TULF ) தலைமையை முற்றாகப் புறக்கணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் போலி நிலையை மக்களுக்கு இனம் காட்டவும், விடுதலைப் போராளிகளுடன் பிற்போக்குக் கும்பலான தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு (TULF )க்கு எந்த தொடர்புகளும் இல்லை என்பதனை வெளிப்படுத்தவும், தமிழர் விடுதலைக் கூட்டணியினர்தான் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடுதலை இயக்கம் என்ற போலி வாதத்தினையும் [illegible] நாம் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் செயற்பட உள்ளோம்.

....2/-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதற்காக எமது போராட்டத்துக்கு அனியமாக உள்ள சுயேச்சை உறுப்பினர்களுக்கு ஒரே அணியில் நிற்க வைத்து ஆதரவு கொடுப்பதன்மூலம், அவர்களை ஒரே அணியில் நிற்க வைத்துத் தமிழர் விடுதலைக் கூட்டணியினரை தோற்கடிக்க வேண்டும் என முடிவு செய்துள்ளோம். அவ்வணியின் வெற்றிக்குத் தமிழீழ விடுதலையே தமது இறுதி தாகமாகக் கொண்டுள்ள ஈழம்வாழ் தமிழ் மக்கள் தமது முழுமையான ஆதரவைக் கொடுக்கவேண்டுமென வேண்டுகின்றோம்.

எமது கழகத்தைப் பொறுத்தவரை நாம் தேர்தலில் நம்பிக்கை அற்றவர்கள். தேர்தலின் மூலம் தமிழீழ விடுதலையைவென்றெடுக்க முடியாது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர்கள். விடுதலைக்கான அமைப்புகளையோ, போராட்டங்களையோ முன்னெடுக்காது பாராளுமன்றப் பதவிகளை மட்டும் வைத்திருப்பதன் மூலம் ஓர் விடுதலை இயக்கமாக தமிழர் விடுதலைக் கூட்டணியினர் (TULF ) காட்சியளிக்கும் ஒரு மாயையைவிரட்டவேண்டியுள்ளது. இன்றுவரை பாராளுமன்ற உறுப்பினர் தலைமையின் கட்டுப்பாட்டில் விடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படாத நிலையில், ஒரு மாற்றுத் தலைமையின்கீழ் இப்போராட்டம் முன் எடுத்துச் செல்லவேண்டிய தேவையில் ஒரு புரட்சிகர விடுதலைப் போராட்ட அமைப்பின் கீழ் பாராளுமன்றம் உட்பட எல்லா நிலைகளிலும் இப்போராட்டத்தை வழி நடத்திச் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கருத்தும் இன்று சிலரினால் முன்வைக்கப்படுகின்றது. இப்பகிஷ்கரிப்பானது மறைமுகமாக தமிழர் விடுதலைக்கூட்டணியினரை மீண்டும் பாராளுமன்றம் அனுப்பி அத்தலைமையைப் பலப்படுத்துகின்ற நிலையைஎம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது.

இவ்வண்ணம்,

(க. உமாமகேஸ்வரன் (அ) முகுந்தன்)
செயலதிபர் - த.ம.வி.க (PLOT)

Secretary General
PEOPLE'S LIBERATION ORAGANIZATION
OF TAMILEELAM

(PLOT)

-/2....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

[illegible] — அறிக்கை

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாகக் கூறிக் கொண்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் ( TULF ) போலி உருவை ஈழம் வாழ் தமிழ் மக்கள் மத்தியிலும், உலகநாடுகளிலும் வெளிப்படுத்த வேண்டிய தேவை இன்று எமக்கு ஏற்பட்டுள்ளது.

எந்தவிதமான விடுதலைக்கான அமைப்புக்களையோ, போராட்டத் திட்டங்களையோ, இன்றேல் போராட்டங்களையோ செயற்படுத்தாத நிலையிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ( TULF ) தாம்தான் தமிழீழத்தின் விடுதலைக்காகப் போராடும் ஒரே இயக்கம் எனவும், தம் கட்டுப்பாட்டின் கீழ்தான் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் கழகங்களும் இளைஞர் இயக்கங்களும் செயற்பட்டு வருகின்றன என்ற தவறான கருத்தினை மறைமுகமாகவும், தேவைக்கேற்ப வெளிப்படையாகவும், தமிழீழ மக்கள் மத்தியிலும், உலக நாடுகளிலும் செய்திகளைப் போலித்தன்மாகப் பிரசாரம் செய்து வருகின்றனர். இதன் மூலம் தமிழீழத்தில் தேர்தல் காலங்களில் வாக்குகளைப் பெற்று லாபம் பெறவும், வெளிநாடுகளில் விடுதலைக்குக் கிடைக்கக்கூடிய ஒருசில உதவிகளையும் தாங்கள் அபகரித்துக் கொண்டு தங்கள் தன்வாழ்வினை வளம்படுத்திக் கொள்கின்றனர். இதுமட்டுமன்றி ஐ.தே.கட்சியுடன் ( TULF ) மறைமுகக் கூட்டு வைத்து ஏகாதிபத்திய அமெரிக்க அரசுக்கு ஆதரவாகவும் செயற்பட்டு வருகின்றனர். இதன் மூலம் விடுதலைக்குப் போராடும் கழகங்களுக்கும், போராளிகளுக்கும் பேராபத்து ஏற்படுத்தியுள்ளனர். இவ்வாறான சூழ்நிலையிலேயே மறைமுக இயக்கங்கள் த.வி.கூட்டணியினரின் ( TULF ) தலைமையை முற்றாகப் புறக்கணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் போலி நிலையை மக்களுக்கு இனம் காட்டவும், விடுதலைப் போராளிகளுடன் பிற்போக்குக் கும்பலான தமிழர் விடுதலைக் கூட்டணி ( TULF )க்கு எந்தத் தொடர்புகளும் இல்லை என்பதனை வெளிப்படுத்தவும், தமிழர் விடுதலைக் கூட்டணியினர்தான் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடுதலை இயக்கம் என்ற போலி வாதத்தினையும் தூக்கி எறிவதற்காக நாம் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் செயற்பட உள்ளோம். இதற்காக எமது போராட்டத்திற்கு அணியமாக உள்ள சுயேச்சை உறுப்பினர்களுக்கு ஒரே அணியில் ஆதரவு கொடுப்பதன் மூலம், அவர்களை ஒரே அணியில் நிற்க வைத்துத் தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தோற்கடிக்க வேண்டும் என முடிவு செய்துள்ளோம். அவ்வணியின் வெற்றிக்குத் தமிழீழ விடுதலையே தமது இதயதாகமாகக் கொண்டுள்ள ஈழம் வாழ் தமிழ் மக்கள் தமது முழுமையான ஆதரவைக் கொடுக்க வேண்டுமென வேண்டுகின்றோம்.

எமது கழகத்தைப் பொறுத்தவரை நாம் தேர்தலில் நம்பிக்கை அற்றவர்கள். தேர்தலின் மூலம் தமிழீழ விடுதலையை வென்றெடுக்க முடியாது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர்கள். விடுதலைக்கான அமைப்புக்களையோ, போராட்டங்களையோ முன்னெடுக்காது பாராளுமன்றப் பதவிகளை மட்டும் வைத்திருப்பதன் மூலம் ஓர் விடுதலை இயக்கமாக தமிழர் விடுதலைக் கூட்டணி ( TULF ) காட்சியளிக்கும் ஒரு மாயையை விரட்ட வேண்டியுள்ளது. இன்று வரை பாராளுமன்ற உறுப்பினர் தலைமையின் கட்டுப்பாட்டில் விடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படாத நிலையில் ஒரு மாற்றுத் தலைமையின் கீழ் இப்போராட்டம் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவையினால் ஒரு புரட்சிகர விடுதலைப் போராட்ட அமைப்பின் கீழ் பாராளுமன்றம் உட்பட்ட எல்லா நிலைகளிலும் இப்போராட்டத்தை வழி நடத்திச் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

மலையகத் தமிழர்களின் வாக்குரிமை, குடியுரிமைகள் பறிக்கப்பட்டுப் பாராளுமன்றத்துக்குத் தம் பிரதிநிதிகளை அனுப்பும் வாய்ப்பைச் சிறீ லங்கா அரசு நிராகரித்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிற்போக்குத் தலைமைப் பீடம் வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்டதை எதிர்த்துக் குரல் கொடுத்து முதலைக் கண்ணீர் விட்டனரேயன்றி அம்மக்களில் ஒருவரையேனும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து பாராளுமன்றத்துக்கு அனுப்பி அப்பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு மாற்று வழியைச் செய்து கொடுக்கவில்லை. இந்நிலையைப் போக்கும் வகையில் நாம் அடுத்து வரும் தேர்தலில் செயற்படுவோம்.

தொடர் ... மறுபக்கம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கருத்தும் இன்று சிலரினால் முன் வைக்கப்படுகின்றது. இப்பகிஷ்கரிப்பானது மறைமுகமாக தமிழர் விடுதலைக் கூட்டணியை மீண்டும் பாராளுமன்றம் அனுப்பி, அத்தலைமையைப் பலப்படுத்துகின்ற நிலையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வண்ணம்,
க. உமா மகேஸ்வரன், @
முகுந்தன்,
செயலதிபர் - த.ம.வி.க
(PLOTE)

சென்னை,
20.9.'82.

- 0 -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்